**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் மற்றும்**
**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை : திரு.எஸ்.முருகவேல், பி.ஏ., பி.எல்.,**
**கூடுதல் மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழக்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ விசுவாவசு வருடம் மாசி திங்கள் 21–ஆம் நாள்)**

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.142/2023**
(CNR.No.TNTS04-000101-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.144/2023**
(CNR.No.TNTS04-000103-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.146/2023**
(CNR.No.TNTS04-000107-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.148/2023**
(CNR.No.TNTS04-000109-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.150/2023**
(CNR.No.TNTS04-000111-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.152/2023 மற்றும்**
(CNR.No.TNTS04-000113-2023)
**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.154/2023**
(CNR.No.TNTS04-000115-2023)

* * * * * * * *

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.142/2023**

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் புதுதெரு, கதவு எண்.9 என்ற முகவரியில் வசித்துவரும், மாரியப்பன் மனைவி, இந்து, கூலிவேலை, 50 வயதுள்ள மாரியம்மாள்

. . . மனுதாரர்

/எதிர்/

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:39:22 +0530

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.144/2023</u>

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2ம் புதுதெரு, கதவு எண்.4/23 என்ற முகவரியில் வசித்துவரும், தங்கம் மனைவி, இந்து, 50 வயதுள்ள சீதாலெட்சுமி

... மனுதாரர்

/எதிர்/

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.146/2023</u>

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் புதுதெரு, கதவு எண்.9 என்ற முகவரியில் வசித்துவரும், அனந்தப்பன் குமாரர், இந்து, 52 வயதுள்ள மாரியப்பன்

... மனுதாரர்

/எதிர்/

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:39:29 +0530

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.148/2023</u>

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, கதவு எண்.80/32ல் வசித்துவரும், ஆனந்த் குமாரர், இந்து, 9 வயதுள்ள இளவர் வசந்த் (தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, கதவு எண்.80/32ல் வசித்துவரும், ஆனந்த் மனைவி, இந்து, வீட்டுவேலை 27 வயதுள்ள மகாலெட்சுமி மூலமாக)

... மனுதாரர்

/எதிர்/

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.150/2023</u>

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2ம் புதுதெரு, கதவு எண்.4/23–ல் வசித்துவரும், பெருமாள் குமாரர், இந்து, 52 வயதுள்ள தங்கம்

... மனுதாரர்

/எதிர்/

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:39:36 +0530

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.152/2023**

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, கதவு எண்.80/32 ல் வசித்துவரும், ஆனந்த் குமாரர், இந்து, 7 வயதுள்ள இளவர் கோபிநாத் (தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, கதவு எண்.80/32 ல் வசித்துவரும், ஆனந்த் மனைவி, இந்து, 27 வயதுள்ள மகாலெட்சுமி மூலமாக)

... மனுதாரர்

/எதிர்/

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.154/2023**

தென்காசி மாவட்டம், சேர்ந்தமரம் கிராமம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, கதவு எண்.80/32 ல் வசித்துவரும், ஆனந்த் மனைவி, இந்து, 27 வயதுள்ள மகாலெட்சுமி

... மனுதாரர்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:39:42 +0530

/எதிர்/

1. திருநெல்வேலி – 627002, பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு, கதவு எண்.69 என்ற முகவரியில் வசித்துவரும், நாராயணன்பிள்ளை குமாரர் சேர்ந்தையன்

2. திருநெல்வேலி - 627003, திருவனந்தபுரம் ரோடு, எண்.2-ல் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், அதன் நிர்வாக இயக்குனர் மூலம்

... எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16.12.2022 |
| மனுக்கள் கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள் | : | 18.04.2023 |
| உத்தரவு நாள் | : | 05.03.2026 |

இந்த ஏழு மனுக்களும் கடந்த 05.02.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது, அனைத்து மனுக்களின் மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.J. வேல்முருகன் அவர்களும், 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. C. ஷாந்தகுமார் அவர்களும் முன்னிலையாகியும், 1 ஆம் எதிர்மனுதார் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லாததாலும், 1 ஆம் எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1 ஆம் எதிர்மனுதார் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை எனது பரிசீலனையில் இருந்துவந்த இம்மனுக்களில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## பொதுவான தீர்வளிப்பு

இந்த ஏழு மனுக்களும், அம்மனுக்களின் மனுதார்களால், மோட்டார் வாகனச் சட்டம் பிரிவுகள் 140 மற்றும் 166–ன்கீழ் எதிர்மனுதார்களிடமிருந்து மேற்படியார்களுக்கு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:39:53 +0530

விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீட்டு தொகைகள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. **<u>ஏழு மனுக்களின் பொதுவான சுருக்கம்</u>**

கடந்த 18.06.2022 ஆம் தேதியன்று, மனுக்களில் கண்ட மனுதார்கள், TN 74 N 1922 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தில், தேனி–மதுரை பிரதான சாலையில், ஆண்டிப்பட்டி கணவாய் அருகே உள்ள TTK தோட்டம் அருகே, மாலை சுமார் 05.50 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பயணம் செய்து வந்துகொண்டிருந்தபோது, அதே சாலையில் எதிர் திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த 2 ஆம் எதிர்மனுதாருக்குச் சொந்தமான TN 72 N 2089 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தினை அதன் ஓட்டுநரான 1 ஆம் எதிர்மனுதார், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், நடு ரோட்டையும் தாண்டி வந்து, மனுதார்கள் பயணம் செய்த பேருந்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். அந்த விபத்தில் இம்மனுக்களில் கண்ட மனுதார்களுக்கு உடம்பு முழுவதும் ரத்தக் காயங்களும், எலும்பு முறிவுக் காயங்களும் ஏற்பட்டன. உடனடியாக மனுதார்களை தேனி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். பின்னர் மனுதார்கள் தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை மேற்கொண்டனர். விபத்தானது, 2 ஆம் எதிர்மனுதாரின் வாகனத்தை விபத்தின்போது ஓட்டிய 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால் ஏற்பட்டதால், அவர் மீது ஆண்டிப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண்.213/2022–ல் இ.த.ச., 279, 337, 304(A)–ன்கீழ் குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு பின்பு, மனுதார்களால் முன்புபோல் எவ்வித வேலையும் செய்ய இயலவில்லை. எனவே, இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023 மனுவின் மனுதாரான மாரியம்மாளுக்கு ரூ.15,00,000/–மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.144/2023 மனுவின் மனுதாரான சீதாலெட்சுமிக்கு ரூ.5,00,000/–மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.146/2023 மனுவின் மனுதாரான மாரியப்பனுக்கு ரூ.5,00,000/–மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.148/2023 மனுவின் மனுதாரான இளவர் வசந்த்க்கு ரூ.5,00,000/–மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.150/2023

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:39:59 +0530

மனுவின் மனுதாரான தங்கத்திற்கு ரூ.5,00,000/—மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.152/2023 மனுவின் மனுதாரான இளவர் கோபிநாத்துக்கு ரூ.5,00,000/—மும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.154/2023 மனுவின் மனுதாரான மகாலெட்சுமிக்கு ரூ.5,00,000/—மும் எதிர்மனுதார்கள் இழப்பீடாக செலுத்தவேண்டும் எனக் கோரி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3. **<u>ஏழு மனுக்களிலும் 2 ஆம் எதிர்மனுதார் தாக்கல் செய்த எதிருரைகளின் பொதுவான சுருக்கம்</u>**

மனுதாரர்களின் மனுக்கள் உண்மையல்ல. மனுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு விபத்து நடைபெறவில்லை. TN 74 N 1922 என்ற பதிவெண் கொண்ட பேருந்தினை ஓட்டிவந்த ஓட்டுநரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த விபத்திற்கு 2 ஆம் எதிர்மனுதாரோ, 2 ஆம் எதிர்மனுதாரின் ஓட்டுநரோ பொறுப்பாகமாட்டார். எனவே, இந்த 2 ஆம் எதிர்மனுதார் எவ்வித இழப்பீடும் கொடுக்கக் கடமைப்பட்டவரில்லை. 2 ஆம் எதிர்மனுதார் ஓட்டுநர் மீது காவல்நிலையத்தில் கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் குற்ற எண்.213/2022—ல் முறையான விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு சம்பந்தமில்லாத இந்த 2 ஆம் எதிர்மனுதாரை தரப்பினராக சேர்த்து நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதார்களுக்கு விபத்தினால் எவ்வித நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை. விபத்தினால் மனுதார்களுக்கு சாதாரண சிறு காயங்களே ஏற்பட்டுள்ளன. மனுதார்களுக்குரிய வயது, வருமானம், தொழில் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட காயங்கள், அதற்கு மனுதார்கள் மேற்கொண்ட மருத்துவ கிசிச்சைகள் ஆகியவைகளை மனுதார்களே தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். கோரியுள்ள இழப்பீட்டு தொகைகளும், அதற்கு கேட்டுள்ள வட்டி விகிதமும் அபரிமிதமானவை. மற்றபடி மனுதார்கள் மனுக்களில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும். அவை அனைத்தும் இந்த எதிர்மனுதாரால் மறுக்கப்படுகின்றன. எனவே, மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும்.

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:40:04 +0530

4. மனுதார்களின் மனுவுரைகள், 2 ஆம் எதிர்மனுதாரின் எதிருரைகள் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இம்மனுவின் தீர்வுக்காக கீழ்க்கண்ட பொதுப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன

**ஆய்வுக்குரிய பொதுவான பிரச்சினைகள்**

1. வழக்கு விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது?
2. இம்மனுக்களில் மனுதார்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கத்தக்கதா?
3. அவ்வாறு கிடைக்கத்தக்கது எனில், எந்த எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை வழங்க கடமைப்பட்டவர்?
4. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
5. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.144/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
6. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.146/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
7. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.148/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
8. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.150/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
9. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.152/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?
10. இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.154/2023–ன் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீடு தொகை எவ்வளவு?

5. இந்த ஏழு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபத்துக்களும் ஒரே விபத்து என்பதாலும், ஏழு மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரப்பினர்களும் அதே

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:40:10 +0530

தரப்பினர்கள் என்பதாலும், இந்த ஏழு மனுக்களையும் சேர்ந்தரணையாக விசாரித்து, பொது சாட்சியம் பதிவு செய்யவும், பொதுவாக சான்றாவணங்கள் குறியீடு செய்யவும் முடிவு செய்யப்பட்டு, ஏழு மனுக்களிலும் பொதுவான தீர்வளிப்பு பகர முடிவு செய்யப்பட்டதால், இந்த ஏழு மனுக்களின் சாட்சிய, சான்றாவணங்கள் அனைத்தும் முதல் வழக்கான, இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023 மனுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மனுதாரர்கள் தரப்பில், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023 மனுவின் மனுதாரர் திருமதி. மாரியம்மாள் ம.சா.1 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.144/2023 மனுவின் மனுதாரர் திருமதி. சீதாலெட்சுமி ம.சா.2 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.146/2023 மனுவின் மனுதாரர் திரு. மாரியப்பன் ம.சா.3 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.148/2023 மனுவின் இளவர் மனுதாரின் தாயரான திருமதி. மகாலெட்சுமி ம.சா.4 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.150/2023 மனுவின் மனுதாரர் திரு. தங்கம் ம.சா.5 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.152/2023 மனுவின் இளவர் மனுதாரின் தாயரான திருமதி. மகாலெட்சுமி ம.சா.6 ஆகவும், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.154/2023 மனுவின் மனுதாரான திருமதி. மகாலெட்சுமி ம.சா.7 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மனுதார்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.14 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதார்கள் தரப்பில், 1 ஆம் எதிர்மனுதார் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதார்கள் தரப்பில் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், இம்மனுக்களில் நீதிமன்ற சான்றாவணம்–1 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. கற்றறிந்த மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, இந்த விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவினாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டது என்றும், மேலும், 1 ஆம் எதிர்மனுதார் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், 2 ஆம் எதிர்மனுதார், விபத்திற்குள்ளான அரசுப் பேருந்தின் உரிமையாளர் என்றும், அந்த விபத்தில் மனுதார்கள் அனைவரும் காயமடைந்ததாகவும், விபத்தில் மனுதார்களுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளது எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும்,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:40:20 +0530

மனுதார்களுக்குரிய இழப்பீட்டு தொகையை எதிர்மனுதார்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றும், எனவே, மனுதார்கள் கோரியபடி பரிகாரம் வழங்கலாம் என வாதிட்டார்.

7. கற்றறிந்த 2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, விபத்தானது இந்த அரசுப் பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், எதிரே வந்த, மனுதார்கள் பயணம் செய்த TN 74 N 1922 என்ற அரசுப் பேருந்தின் கவனக்குறைவினால் ஏற்பட்டது என்றும், பொய்யான வகையில் ஒரு வழக்கை பதிவு செய்து இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனுக்களில் உள்ள மனுதார்கள் அனைவருக்கும் சாதாரண காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ள நிலையில், அதைப் பொறுத்து ஆவணங்கள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, 2ஆம் எதிர்மனுதார் அரசுப் போக்குவரத்துக் கழகம் எந்தவித இழப்பீட்டு தொகையும் வழங்கக் கடமைப்பட்டவரில்லை என்றும், மனுக்களை தள்ளுபடி செய்யலாம் என வாதிட்டார்.

8. <u>பிரச்சினை எண் 1–க்கான தீர்வு</u>

இந்த மனுக்களைப் பொறுத்து யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது? என பரிசீலனை செய்யும்போது, இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023 மனுவின் மனுதாரர் மாரியம்மாள் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2022ஆம் தேதியன்று, TN 74 N 1922 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தில், தனது ஊரான சேர்ந்தமரத்திற்கு திரும்ப வந்துகொண்டிருந்தபோது, தேனி–மதுரை பிரதான சாலையில், ஆண்டிப்பட்டி கணவாய் அருகே உள்ள TTK தோட்டம் அருகே, மாலை சுமார் 05.50 மணியளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பயணம் செய்து வந்துகொண்டிருந்தபோது, அதே சாலையில் எதிர் திசையில் கிழக்கிலிருநது மேற்கு நோக்கி வந்த 2ஆம் எதிர்மனுதாருக்குச் சொந்தமான TN 72 N 2089 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தினை அதன் ஓட்டுநரான 1ஆம் எதிர்மனுதார், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், நடு ரோட்டையும் தாண்டி வந்து, தான் பயணம் செய்த பேருந்தின்மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், அந்த

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:40:27 +0530

விபத்தில் தன்னுடன் பயணம் செய்த மாரியப்பன், தங்கம், சீதாலெட்சுமி, மகாலெட்சுமி மற்றும் கோபிநாத் ஆகியோர்கள் பயணம் செய்ததாகவும், அவ்விபத்தில் தனக்கும், அவர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அவ்வாறு காயமடைந்த பிறகு தானும், மற்ற நபர்களும் தேனி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் சங்கரன்கோவிலில் உள்ள சாமுவேல் கிளினிக் என்ற தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு சிகிச்சை எடுத்ததாகவும், இந்த விபத்திற்கு TN 72 N 2089 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையே காரணம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. மேலும், இவ்விபத்து சம்பந்தமாக, இந்த மனுதார் பயணம் செய்த அரசுப் பேருந்தின் நடத்துநர் மகேஷ் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆண்டிப்பட்டி காவல்துறையினர் கடந்த 18.06.2023 தேதியில் குற்ற எண்.213/2022–ல் குற்ற வழக்கை பதிவு செய்துள்ளதாக அந்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ம.சா.1 ன் விபத்து பதிவேடு ம.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதை மறுக்கும் 2 ஆம் எதிர்மனுதார் தரப்பில், 1 ஆம் எதிர்மனுதார் எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 18.06.2022 தேதியில் தான் அரசுப் பேருந்தை ஓட்டி வரும்போது, TN 74 N 1922 என்ற பதிவெண்கொண்ட மற்றொரு அரசுப் பேருந்தை ஓட்டிவந்த நபர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், இந்த விபத்திற்கு தான் காரணம் அல்ல என்றும், TN 74 N 1922 என்ற பதிவெண் கொண்ட அரசுப் பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவே வழக்கு விபத்திற்கு காரணம் என்றும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். ஆனால், எ.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, மனுதார்கள் அனைவரும் பேருந்தில் பயணம் செய்ததாகவும், தன் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு, இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று ஒப்புக்கொண்டே சாட்சியமளித்துள்ளார்.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:40:37 +0530

10. இவ்வாறு மனுதாரர்கள் தரப்பில், ம.சா.1 முதல் ம.சா.7 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்களும் தங்களது சாட்சியங்களில், விபத்தானது 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையினாலும்தான் ஏற்பட்டது எனக் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ள நிலையில், அதை மறுக்கும் விதமாக, எதிர்மனுதார்கள் தரப்பில் எ.சா.1–ஐ சாட்சியாக விசாரித்திருந்தாலும், அதை மறுத்து, தன் மீது தவறு இல்லை என்பதை எடுத்துரைப்பதற்கும், மனுதாரர்கள் பயணம் செய்த, எதிரே வந்த அரசுப் பேருந்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்பதை எடுத்துரைப்பதற்கும் போதுமானதாக இல்லை. மேலும், மனுதாரர்கள் தரப்பில், இந்த விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டது என எடுத்துரைக்கப்பட்டுள்ள நிலையில், இதை மறுக்கும் விதமாக, காவல்துறையினர் தயார் செய்த பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் போன்றவைகளை முன்னிலைப்படுத்தியோ அல்லது தன் மீது தவறு இல்லை என சட்டப்படி நடவடிக்கை எடுத்ததாகவோ 1, 2 எதிர்மனுதார்கள் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. அவ்வாறு எந்தவித எடுத்துரைப்பும் இல்லாத நிலையில், 1 ஆம் எதிர்மனுதார் தன்னை எ.சா.1 ஆக விசாரித்து சாட்சியமளித்திருந்தாலும், இந்த மனுவைப் பொறுத்து ம.சா.1 முதல் ம.சா.7 சாட்சிகளின் சாட்சியங்களின் அடிப்படையிலும், ம.சா.ஆ.1 மற்றும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும், விபத்தானது, TN 72 N 2089 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தினை, விபத்தின்போது ஓட்டிய 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையினாலேயே ஏற்பட்டது என முடிவு செய்து, அவ்வாறே இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

11. <u>பிரச்சினை எண்.2–க்கான தீர்வு</u>

இம்மனுக்கள் சம்பந்தப்பட்ட விபத்தில் காயமடைந்த மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? எனப் பார்க்கும்போது, இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023–ன் மனுதாரர் மாரியம்மாளுக்கு வலது தொடையிலும், வலது காலிலும் எலும்பு முறிவுக் காயங்களும், இடுப்பு எலும்பு முறிவுக் காயங்களும் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அவருக்குரிய மருத்துவ விடுவிப்பு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:42:06 +0530

அறிக்கை ம.சா.ஆ.8 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.144/2023—ன் மனுதாரர் சீதாலெட்சுமிக்கு வலது கால் முட்டியில் கொடுங்காயமும் மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.146/2023—ன் மனுதாரர் மாரியப்பனுக்கு வலது காலில் வெட்டுக்காயமும் மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.10 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.148/2023—ன் மனுதாரர் இளவர் வசந்த்க்கு உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.11 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.150/2023—ன் மனுதாரர் தங்கம் என்பவருக்கு வலது கையிலும், இடது காலிலும் எலும்புமுறிவு கொடுங்காயங்களும் மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.12 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.152/2023—ன் மனுதாரர் இளவர் கோபிநாத் என்பவருக்கு உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.13 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல், இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.154/2023—ன் மனுதாரர் மகாலெட்சுமிக்கு இடதுகால் முட்டியிலும், வலது கால் முட்டியிலும் கொடுங்காயமும் மற்றும் உடம்பு முழுவதும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டு, அவருக்கான விபத்து பதிவேடு ம.சா.ஆ.14 ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனுக்களைப் பொறுத்து, மனுதார்கள் அனைவரும் காயமடைந்து, சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளனர் என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளதால், மனுதார்கள் அனைவருக்கும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. இவ்வாறாக பிரச்சினை எண்.2—க்கு மனுதார்களுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:42:11 +0530

12. **<u>பிரச்சினை எண்.3–க்கான தீர்வு</u>**

இந்த மனுவைப் பொறுத்து, எந்த எதிர்மனுதாரர் இழப்பீடு தொகையை வழங்க கடமைப்பட்டவர்? எனப் பார்க்கும்போது, இந்த மனுவில், பிரச்சினை எண்.1–ஐ பொறுத்து, வழக்கு விபத்தானது, 1 ஆம் எதிர்மனுதாரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையினால் ஏற்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த 1 ஆம் எதிர்மனுதார் ஓட்டிய வாகனம், 2 ஆம் எதிர்மனுதாருக்கு சொந்தமானது என்பதும், மேற்படி 2 ஆம் எதிர்மனுதார் பேருந்தானது அரசுப் பேருந்து என்பதால், காப்பீடு செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது என்பதும் ம.சா.ஆ.3 இயக்கூர்தி ஆய்வாளர் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. மேலும், 1 ஆம் எதிர்மனுதார், 2 ஆம் எதிர்மனுதாரின் கீழ் பணிபுரியும் ஊழியர் என்பது எதிர்மனுதார்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 2 ஆம் எதிர்மனுதாரின் ஓட்டுநரான 1 ஆம் எதிர்மனுதாரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ள நிலையில், 1 ஆம் எதிர்மனுதாருக்காக, வாகனத்தின் உரிமையாளர் என்ற நிலையில், பகரப் பொறுப்பின் அடிப்படையில், வாகனத்தின் உரிமையாளரே மனுதார்களுக்கான இழப்பீட்டை செலுத்தவேண்டிய நிலையில், 2 ஆம் எதிர்மனுதாரே, மனுதார்களுக்குரிய இழப்பீட்டு தொகையை வழங்கக் கடமைப்பட்டவர் என முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, பிரச்சினை எண்.3–ஐப் பொறுத்து இவ்வாறாக முடிவு செய்யப்படுகிறது.

13. **<u>பிரச்சினை எண்.4–க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதார் மாரியம்மாளுக்கு விபத்து நடந்த தேதியில் 50 வயது என்றும், அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மேலும், மனுதார், கூலி வேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– வருமானம் ஈட்டிவந்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுவைப் பொறுத்து மனுதாருக்கு ஏற்பட்ட வருமான இழப்பை கணக்கீடு செய்யும்போது, மனுதார், கூலி வேலை செய்து வருவதாகக் கூறும் நிலையில், விபத்தானது 2022 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், மனுதாருக்கு விபத்தின்போது 50 வயது

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:42:17 +0530

என்றும், அவர் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் பெற்று வந்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படாதபோதிலும், விபத்தானது கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாரின் வயதையும், அவர் செய்து வந்ததாகச் சொல்லும் வேலையையும் கருத்திற்கொண்டு, மனுதாருக்கு ரூ.10,000/- தொகையை மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது.

14. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.7 மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள், ம.சா.ஆ.8 மருத்துவ விடுவிப்பு அறிக்கை மற்றும் நீ.சா.ஆ.1 பகுதி நிரந்தர ஊனச்சான்றிதழ் ஆகியவைகளை கருத்திற்கொண்டும், மனுதார் மூன்று மாத காலங்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வீதம், மொத்தம் மூன்று மாதங்களுக்கு வருமான இழப்பாக, மொத்தம் ரூ.10,000 x 3 = ரூ.30,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

15. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், இதுசம்பந்தமாக மனுதாருக்கு ஏற்பட்ட பாதிப்பை கண்டறிய மாவட்ட மருத்துவக் குழுமத்திற்கு மனுதார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மேற்படி மாவட்ட மருத்துவ குழுமம் மனுதாரை பரிசீலனை செய்து, அவருக்கு ஏற்பட்ட பகுதி நிரந்தர ஊனத்திற்கு ஆய்வு செய்து, அவருக்கு 15% பகுதியான நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தச் சான்று நீ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில், இதனைப் பொறுத்து அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் நீ.சா.ஆ.1ன் அடிப்படையில், மனுதாருடைய உடலில் எந்த ஒரு பாகமும் முழுவதுமாக துண்டிக்கப்பட்டு, அவர் முன்பு செய்த வேலையான கூலி வேலையை செய்ய முடியாத அளவுக்கோ அல்லது வேறு வேலை எதுவும் செய்ய முடியாத அளவுக்கோ

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:42:23 +0530

ஊனம் இருந்ததாக மனுதார் தரப்பில் வேறு ஆவணங்களை முன்னிலைப்படுத்தி எடுத்துரைக்கப்படவில்லை. ஆகவே, இந்த மனுவை பொறுத்து பெருக்கல் குறியீட்டு எண் கணக்கீடு செய்ய இயலாது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், கீழ்க்கண்ட வழக்கின்படி, ***Future General India Insurance Company Limited -Vs- Manivannan & Others reported in 2024 (1) TNMAC Page 598 (D.B)*** என்ற வழக்கில் முடிவு செய்துள்ளபடி 1% ஊனத்திற்கு 7,000/- வீதம் 15% ஊனத்திற்கு 15 x 7000 = 1,05,000/- பகுதியான ஊனத்திற்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

16. மேலும், மனுதார் மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டபோது, செலவீனங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 ரசீதுகளின்படி மனுதாருக்கு மொத்தம் ரூ.1,10,689/- மருத்துவ செலவாக செலவிடப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ரசீதுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான ரூ.1,10,689/-ஐ மனுதார் மருத்துவ செலவு செய்ததாக கண்டுள்ள நிலையில், மேற்படி தொகையான ரூ.1,10,689/- மனுதாருக்கு மருத்துவச் செலவீனம் என்ற தலைப்பில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

17. மேலும், மனுதார் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டதாகவும், அதன்பின்பு மனுதார் வெளிநோயாளியாகவும் சிகிச்சை எடுத்துக்கொண்டுள்ளதாக மனுவிலும், தனது சாட்சிய, சான்றாவணங்களிலும் குறிப்பிட்டுள்ளதைக் கருத்திற்கொண்டும், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை கருத்திற்கொண்டும், ம.சா.ஆ.8, மருத்துவ விடுவிப்பு அறிக்கையை கருத்திற்கொண்டும் மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.40,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில், போக்குவரத்து செலவுக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டு, அவருக்கு

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:42:28 +0530

தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.10,000/− கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/−மும், மனுதாரருக்கு மருத்துவமனையில் உதவியாக இருந்த நபரைப் பொறுத்து ஒரு நாளைக்கு ரூ.400/− வீதம் 30 நாட்களுக்கு 30 x 400 = 12,000/− Attendant Charges என்ற முறையில் கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 15% பகுதி நிரந்தர ஊனத்திற்காக | ரூ.1,05,000/− |
| 2. | 3 மாத மொத்த வருமான இழப்புக்காக | ரூ.30,000/− |
| 3. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.10,000/− |
| 4. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.10,000/− |
| 5. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.40,000/− |
| 6. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/− |
| 7. | Attendant Charges−க்காக | ரூ.12,000/− |
| 8. | மருத்துவ செலவீனங்களுக்காக | ரூ.1,10,689/− |
| | **மொத்தம்** | **ரூ.3,18,689/−** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.4−ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

18. **<u>பிரச்சினை எண்.5−க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 50 வயது என்றும், அவர் கூலிவேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/−க்கு மேல் வருமானம் பெற்று வந்ததாகவும் மனுவில்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:42:38 +0530

கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாரர் சீதாலெட்சுமிக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

19. மேலும், மனுதார், கூலி வேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் ஈட்டிவந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுவைப் பொறுத்து மனுதாருக்கு ஏற்பட்ட வருமான இழப்பை கணக்கீடு செய்யும்போது, மனுதார், கூலி வேலை செய்து வருவதாகக் கூறும் நிலையில், விபத்தானது 2022 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், மனுதாருக்கு விபத்தின்போது 50 வயது என்றும், அவர் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் பெற்று வந்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படாதபோதிலும், விபத்தானது கடந்த 2022 ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022 ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாரின் வயதையும், அவர் செய்து வந்ததாகச் சொல்லும் வேலையையும் கருத்திற்கொண்டு, மனுதாருக்கு ரூ.10,000/- தொகையை மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது.

20. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, ம.சா.ஆ.9 விபத்துப் பதிவேட்டினை கருத்திற்கொண்டும், மனுதார் 15 நாட்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வீதம், மொத்தம் 15 நாட்களுக்கு வருமான இழப்பாக, மொத்தம் ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

21. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ,

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:43:41 +0530

அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாகவோ மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை மற்றும் அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

22. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக் கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகையும் எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/- |
| 2. | 15 நாட்களுக்கான மொத்த வருமான இழப்புக்காக | ரூ.5,000/- |
| 3. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/- |
| 4. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:43:47 +0530

5. அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.5,000/-

**மொத்தம் ரூ.26,000/-**

இவ்வாறாக, பிரச்சினை எண்.5-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

23. <u>**பிரச்சினை எண்.6-க்கான தீர்வு**</u>

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 52 வயது என்றும், அவர் கூலிவேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/-க்கு மேல் வருமானம் பெற்று வந்ததாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

24. மேலும், மனுதார், கூலி வேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் ஈட்டிவந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுவைப் பொறுத்து மனுதாருக்கு ஏற்பட்ட வருமான இழப்பை கணக்கீடு செய்யும்போது, மனுதார், கூலி வேலை செய்து வருவதாகக் கூறும் நிலையில், விபத்தானது 2022 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், மனுதாருக்கு விபத்தின்போது 52 வயது என்றும், அவர் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/- வருமானம் பெற்று வந்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படாதபோதிலும், விபத்தானது கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாரின் வயதையும், அவர் செய்து வந்ததாகச் சொல்லும் வேலையையும் கருத்திற்கொண்டு, மனுதாருக்கு

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:00 +0530

ரூ.10,000/- தொகையை மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது.

25. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, ம.சா.ஆ.10 விபத்துப் பதிவேட்டினை கருத்திற்கொண்டும், மனுதார் 15 நாட்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வீதம், மொத்தம் 15 நாட்களுக்கு வருமான இழப்பாக, மொத்தம் ரூ.5,000/- வருமான இழப்புக்காக மனுதாருக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

26. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ, அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாக மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

27. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:14 +0530

குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக் கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகையும் எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/– |
| 2. | 15 நாட்களுக்கான மொத்த வருமான இழப்புக்காக | ரூ.5,000/– |
| 3. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/– |
| 4. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/– |
| 5. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.5,000/– |
| | **மொத்தம்** | **ரூ.26,000/–** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.6–ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

28. <u>**பிரச்சினை எண்.7–க்கான தீர்வு**</u>

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 9 வயது என்றும், அவர் பள்ளியில் படித்துவரும் மாணவர் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:20 +0530

29. மேலும், இளவர் மனுதார், பள்ளியில் படிக்கும் ஒரு மாணவர் என்பதால், அவருக்கு எவ்வித வருமானமும் இல்லாத நிலையில், அவருக்கான மாத வருமான இழப்புக்காக, தொகை எதுவும் நிர்ணயம் செய்யப்படவேண்டியதில்லை என இவ்வாயம் கருதுகிறது. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ, அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாகவோ மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

30. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக் கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:26 +0530

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/– |
| 2. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/– |
| 3. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/– |
| 4. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.5,000/– |
| | **மொத்தம்** | **ரூ.21,000/–** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.7–ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

31. **<u>பிரச்சினை எண்.8–க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 52 வயது என்றும், அவர் கூலிவேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/–க்கு மேல் வருமானம் பெற்று வந்ததாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

32. மேலும், மனுதார், கூலி வேலை செய்து வந்து, மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– வருமானம் ஈட்டிவந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுவைப் பொறுத்து மனுதாருக்கு ஏற்பட்ட வருமான இழப்பை கணக்கீடு செய்யும்போது, மனுதார், கூலி வேலை செய்து வருவதாகக் கூறும் நிலையில், விபத்தானது 2022 ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், மனுதாருக்கு விபத்தின்போது 52 வயது என்றும், அவர் மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– வருமானம் பெற்று வந்ததாகவும் கூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு ஆதரவாக மனுதார் தரப்பில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படாதபோதிலும், விபத்தானது கடந்த 2022 ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022 ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார

MURUGAVEL
Digitally signed by MURUGAVEL
Date: 2026.03.05 18:44:35 +0530

நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாரின் வயதையும், அவர் செய்து வந்ததாகச் சொல்லும் வேலையையும் கருத்திற்கொண்டு, மனுதாருக்கு ரூ.10,000/- தொகையை மாத வருமானமாக எடுத்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது.

33. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, ம.சா.ஆ.12 விபத்துப் பதிவேட்டினை கருத்திற்கொண்டும், மனுதார் 15 நாட்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வீதம், மொத்தம் 15 நாட்களுக்கு வருமான இழப்பாக, மனுதாருக்கு மொத்தம் ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

34. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ, அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாகவோ மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில், போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக மனுதாருக்கு ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக, மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:42 +0530

35. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக் கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகை எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/- |
| 2. | 15 நாட்களுக்கான மொத்த வருமான இழப்புக்காக | ரூ.5,000/- |
| 3. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/- |
| 4. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |
| 5. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.5,000/- |
| | **மொத்தம்** | **ரூ.26,000/-** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.8-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

36. **பிரச்சினை எண்.9-க்கான தீர்வு**

இந்த மனுவில், இளவர் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 7 வயது என்றும், அவர் பள்ளியில் படித்துவரும் மாணவர் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:49 +0530

37. மேலும், இளவர் மனுதார், பள்ளியில் படிக்கும் ஒரு மாணவர் என்பதால், அவருக்கு எவ்வித வருமானமும் இல்லாத நிலையில், அவருக்கான மாத வருமான இழப்புக்காக, தொகை எதுவும் நிர்ணயம் செய்யப்படவேண்டியதில்லை என இவ்வாயம் கருதுகிறது. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ, அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாகவோ மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில் போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

38. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக் கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகையும் எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:44:55 +0530

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/- |
| 2. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/- |
| 3. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |
| 4. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.5,000/- |
| | **மொத்தம்** | **ரூ.21,000/-** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.9-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

39. **<u>பிரச்சினை எண்.10-க்கான தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், இழப்பீடு தொகையை கணக்கீடு செய்யும்போது, மனுதாருக்கு விபத்தின்போது 27 வயது என்றும், அவர் குடும்பத்தலைவியாக இருந்துவந்தார் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. மேலும், இந்த மனுதாருக்கு எலும்பு முறிவுக் காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்து மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்படாததால், இந்த விபத்தினால் மனுதாருக்கு சாதாரண சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டதாக இவ்வாயம் இச்சூழலில் முடிவு செய்கிறது.

40. மேலும், மனுதார், குடும்பத்தலைவியாக இருந்து வந்த நிலையில், அவரது வருமானம் குறித்து மனுவில் எதுவும் குறிப்பிடப்படாதபோதிலும், குடும்பத் தலைவியாக இருப்பவரைப் பொறுத்து மாத வருமானம் நிர்ணயிக்கலாம் என மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முன்வழித்தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளதை கருத்திற்கொண்டு, விபத்தானது கடந்த 2022ம் ஆண்டு நடைபெற்றுள்ள நிலையில், கடந்த 2022ம் ஆண்டின் விலைவாசி உயர்வு, பொருளாதார நிலையின்படியும் மற்றும் மற்ற காரணிகளின் அடிப்படையிலும், மனுதாரின் வயதை கருத்திற்கொண்டு, மனுதாருக்கு ரூ.10,000/- தொகையை மாத வருமானமாக நிர்ணயித்துக்கொள்ளலாம் என முடிவு செய்யப்படுகிறது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:00 +0530

41. மனுதாருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக, அக்காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், மனுதார் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட, ம.சா.ஆ.14 விபத்துப் பதிவேட்டினை கருத்திற்கொண்டும், மனுதார் 15 நாட்களுக்கு எந்த வேலையும் செய்திருக்க மாட்டார் என்பதை கருத்திற்கொண்டு, ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வீதம், மொத்தம் 15 நாட்களுக்கு வருமான இழப்பாக, மனுதாருக்கு மொத்தம் ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

42. மேலும், மனுதாருக்கு விபத்தினால் கொடுங்காயங்கள் ஏற்பட்டதாக மனுவில் கூறப்பட்டுள்ள நிலையில், அக்காயங்கள் கொடுங்காயங்கள் என்பதாகவோ, அக்காயங்களினால் ஏற்பட்ட பாதிப்பினால் மனுதாரால் எந்த வேலையும் செய்ய முடியாத அளவுக்கு ஊனம் இருந்ததாகவோ மனுதார் தரப்பில் எந்தவித ஆவணங்களை முன்னிலைப்படுத்தியும் எடுத்துரைக்கப்படாத நிலையில், மனுதாருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண சிறுகாயங்கள் என இவ்வாயம் முடிவு செய்துள்ளதால், மனுதாருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக மனுதாருக்கு ரூ.10,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்து நடந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கும், பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கும் சென்று வந்த வகையில், போக்குவரத்து செலவாக மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என்றும் முடிவு செய்யப்படுகிறது. மேலும், விபத்தின்போது மனுதார் அணிந்திருந்த ஆடை, அணிகலன்கள் இழப்பிற்காக மனுதாருக்கு ரூ.1,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது. மேலும், மனுதாரின் வயதினை கருத்திற்கொண்டும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மைகளை கருத்திற்கொண்டும், அவருக்கு தேவையான அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக, மனுதாருக்கு ரூ.5,000/- கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

43. மேலும், மனுதார் அரசு மருத்துவமனையிலும், அதன்பின் தனியார் மருத்துவமனையிலும் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த ஒரு மருத்துவ செலவுகளும் செய்யப்பட்டதாகக்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:07 +0530

கூறி எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, இந்தத் தலைப்புகளை தவிர்த்து மனுதாருக்கு வேறு தலைப்புகளில் இழப்பீட்டு தொகையும் எதுவும் கிடைக்கத்தக்கது என மனுதார் தரப்பில் தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் எடுத்துரைக்கப்படவில்லை. ஆக, மனுதாருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டுத் தொகை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.10,000/- |
| 2. | 15 நாட்களுக்கான மொத்த வருமான இழப்புக்காக | ரூ.5,000/- |
| 3. | போக்குவரத்து செலவுக்காக | ரூ.5,000/- |
| 4. | ஆடை, அணிகலன்கள் இழப்புக்காக | ரூ.1,000/- |
| 5. | அதிகப்படியான ஊட்டச்சத்துக்காக | ரூ.5,000/- |
| | **மொத்தம்** | **ரூ.26,000/-** |

இவ்வாறாக, பிரச்சினை எண்.10-ஐ பொறுத்து மனுதாருக்கு சாதகமாக முடிவு செய்யப்படுகிறது.

**<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.142/2023</u>**

44. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.3,18,689/-ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001-ல் IFSC Code No - IDIB000T009 க்கு இ-மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.2,559.50/- என்றும், ஏற்கனவே

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:14 +0530

செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/−ஐ கழித்ததுபோக ரூ.2,539.50/−ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.9,372/− என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

**<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.144/2023</u>**

45. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.26,000/−ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001−ல் IFSC Code No − IDIB000T009 க்கு இ−மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.50/− என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/−ஐ கழித்ததுபோக ரூ.30/−ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,050/− என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

**<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.146/2023</u>**

46. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.26,000/−ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:27 +0530

வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.50/– என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்ததுபோக ரூ.30/–ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,050/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

**இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.148/2023**

47. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இளவர் மனுதாருக்கு ரூ.21,000/–ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், இளவர் மனுதாரருக்குரிய இழப்பீட்டு தொகை முழுவதும் ஏதேனும் ஒரு தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கியில் மேற்படி இளவர் மனுதார் தகுந்த வயதடையும் வரையில் வைப்பீடு செய்யப்படவேண்டுமென்றும், மேற்படி தொகைக்கான வட்டியை மட்டும் 6 மாதங்களுக்கொருமுறை மேற்படி இளவர் மனுதாரின் பாதுகாவலரும், தாயாருமான திருமதி. மகாலெட்சுமி என்பவர் சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து நேரடியாக பெற்றுக்கொள்லாமென்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:33 +0530

முத்திரைக்கட்டணம் ரூ.37.50/– என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்ததுபோக ரூ.17.50/–ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

**<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.150/2023</u>**

48. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.26,000/–ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன் மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.50/– என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்ததுபோக ரூ.30/–ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,050/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

**<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.152/2023</u>**

49. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இளவர் மனுதாருக்கு ரூ.21,000/–ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:40 +0530

வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், இளவர் மனுதாரருக்குரிய இழப்பீட்டு தொகை முழுவதும் ஏதேனும் ஒரு தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கியில் மேற்படி இளவர் மனுதார் தகுந்த வயதடையும் வரையில் வைப்பீடு செய்யப்படவேண்டுமென்றும், மேற்படி தொகைக்கான வட்டியை மட்டும் 6 மாதங்களுக்கொருமுறை மேற்படி இளவர் மனுதாரின் பாதுகாவலரும், தாயாருமான திருமதி. மகாலெட்சுமி என்பவர் சம்பந்தப்பட்ட வங்கியிலிருந்து நேரடியாக பெற்றுக்கொள்லாமென்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.37.50/– என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்ததுபோக ரூ.17.50/–ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,000/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

<u>இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.154/2023</u>

50. இறுதியாக, இந்த மனுவானது பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாருக்கு ரூ.26,000/–ஐ, 2 ஆம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியும், மனு செலவுத்தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மேற்படி இழப்பீட்டுத்தொகையை உத்தரவு தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் இந்த தீர்ப்பாயத்தின் தென்காசி இந்தியன் வங்கிக்கிளை கணக்கு எண்.6456273001–ல் IFSC Code No – IDIB000T009 க்கு இ–மாறுதல் மூலம் வைப்பீடு செய்துவிட்டு, அந்த தகவலை asjten@g.mail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் இந்த தீர்ப்பாயத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், மனுதாரருக்கு முழுத்தொகையும் கிடைக்கத்தக்கது என்றும், அதற்கான வட்டியையும், செலவுத்தொகையையும் வைப்பீடு செய்யப்பட்டவுடன்

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:47 +0530

மனுதார் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம் என்றும், மேற்கண்ட இழப்பீட்டுத் தொகைக்குரிய நீதிமன்ற முத்திரைக்கட்டணம் ரூ.50/– என்றும், ஏற்கனவே செலுத்தப்பட்ட முத்திரைக்கட்டணம் ரூ.20/–ஐ கழித்ததுபோக ரூ.30/–ஐ இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தவேண்டுமென்றும், வழக்கறிஞர் கட்டணம் ரூ.1,050/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. இம்மனு ஏற்கனவே மனுதாரின் வருகையின்மைக்காக தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அக்காலத்திற்கு மனுதாருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல.

As per the Judgment of the Honourable High Court in Tr.Cmp Nos.264 to 281 of 2020 M/s. Cholamandalam Ms General Insurance Company Ltd Versus Ayyanar and others, dated 11.05.2020. No separate decree passed.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எடுக்கப்பட்டு, பின்னர் விரிவாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 05ஆம் தேதியன்று திறந்த தீர்ப்பாயத்தில் அவையறிய பகரப்பட்டது.

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:45:54 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| ம.சா.1 | திருமதி. மாரியம்மாள் |
| ம.சா.2 | திருமதி. சீதாலெட்சுமி |
| ம.சா.3 | திரு. மாரியப்பன் |
| ம.சா.4 | திருமதி. மகாலெட்சுமி |
| ம.சா.5 | திரு. தங்கம் |
| ம.சா.6 | திருமதி. மகாலெட்சுமி |
| ம.சா.7 | திருமதி. மகாலெட்சுமி |

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.06.2022 | முதல் தகவல் அறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.2 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:46:02 +0530

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.3 | 20.06.2022 | இயக்க ஊர்தி ஆய்வாளரின் ஆய்வறிக்கையின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | – | மருத்துவ ரசீதுகள் |
| ம.சா.ஆ.5 | 22.06.2022 | மருத்துவ ரசீது |
| ம.சா.ஆ.6 | 12.07.2022 | மருத்துவ ரசீது |
| ம.சா.ஆ.7 | – | மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் |
| ம.சா.ஆ.8 | 12.07.2022 | மருத்துவ விடுவிப்பு அறிக்கை |
| ம.சா.ஆ.9 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.10 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.11 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.12 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.13 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |
| ம.சா.ஆ.14 | 18.06.2022 | விபத்து பதிவேட்டின் ஒளிநகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்**

எ.சா.1 திரு. சேர்ந்தையன்

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** இல்லை

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| நீ.சா.ஆ.1 | 27.03.2025 | பகுதி நிரந்தர ஊனச் சான்றிதழ் |

**மூன்றாம் தரப்பினர் தரப்பு சான்றாவணங்கள்** இல்லை

MURUGAVEL Digitally signed by MURUGAVEL Date: 2026.03.05 18:46:14 +0530

**கூடுதல் மோட்டார் வாகன விபத்து**
**கோருரிமை தீர்ப்பாயர் மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**தென்காசி**

**கூடுதல் சார்பு நீதிமன்றம், தென்காசி**

**இயக்கூர்தி விபத்து கோருரிமை அசல் மனு எண்கள்.142/2023, 144/2023, 146/2023, 148/2023, 150/2023, 152/2023 மற்றும் 154/2023**

**பொதுவான தீர்வளிப்பு (அசல்/வரைவு)**

**நாள் 05.03.2026**